# பத்திரிக்கைச் செய்தி

## பட்டா பெயர் மாற்றம் செய்ய ரூ.10,000/- லஞ்சம் கேட்டு பெற்ற நகர குடியேற்ற சர்வே துணை ஆய்வாளர் கைது

புகார்தாரர் திரு.கிருஷ்ணன், திருப்பரங்குன்றம், மதுரை மாவட்டத்தில் வசித்து வருகிறார். இவர் தன்னுடைய மனைவி திருமதி.சரண்யா பெயரில் புதிதாக வாங்கிய நிலத்திற்கு பட்டா பெயர் மாற்றம் செய்ய திருப்பரங்குன்றம் தாலுகா அலுவலகம், மதுரை மாவட்டத்தில் விண்ணப்பித்திருந்தார். திரு.பிரேம்குமார், நகர குடியேற்ற சர்வே துணை ஆய்வாளர், திருப்பரங்குன்றம் தாலுகா அலுவலகம், மதுரை மாவட்டம் புகார்தாரரின் விண்ணபத்தினை பரிசீலனை செய்து மேலனுப்ப தனக்கு லஞ்சமாக ரூ.10,000/- கொடுக்க வேண்டும் என வற்புறுத்தியுள்ளார். லஞ்சம் கொடுக்க விரும்பாத புகார்தாரர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, மதுரை பிரிவில் புகார் மனு கொடுத்துள்ளார். இப்புகார் மனு சம்பந்தமாக வழக்கு பதிவு செய்யப்பட்டு இன்று 10.10.2023ம் தேதி பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி பொறிவைப்பு நடவடிக்கையின் போது திரு.பிரேம்குமார், நகர குடியேற்ற சர்வே துணை ஆய்வாளர், புகார்தாரரிடமிருந்து லஞ்ச முன்பணமான ரூ.10,000/-யை கேட்டு பெற்ற போது ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறையினரால் கைது செய்யப்பட்டார்.